## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 1-3 - பத்துடை
## (எம்பெருமானது ஸௌலப்யத்தை அருளிச் செய்தல்)

2697 * பத்துடை அடியவர்க்கு எளியவன் * பிறர்களுக்கு அரிய
வித்தகன் * மலர்மகள் விரும்பும் * நம் அரும்பெறல் அடிகள் **
மத்துறு கடைவெண்ணெய் களவினில் * உரவிடை ஆப்புண்டு *
எத்திறம்! உரலினோடு * இணைந்திருந்து ஏங்கிய எளிவே 1

2698 எளிவரும் இயல்வினன் * நிலை வரம்பில பலபிறப்பாய் *
ஒளிவரு முழுநலம் * முதலில கேடில வீடாம் **
தெளிதரும் நிலைமையது * ஒழிவிலன் முழுவதும் இறையோன் *
அளிவரும் அருளினோடு * அகத்தனன் புறத்தனன் அமைந்தே 2

2699 அமைவுடை அறநெறி * முழுவதும் உயர்வற உயர்ந்து[1] *
அமைவுடை முதல் கெடல் * ஒடிவிடையற நிலம் அதுவாம் **
அமைவுடை அமரரும் * யாவையும் யாவரும் தானாம் *
அமைவுடை நாரணன் மாயையை * அறிபவர் யாரே? 3

2700 யாரும் ஓர் நிலைமையன் என * அறிவரிய எம்பெருமான் *
யாரும் ஓர் நிலைமையன் என * அறிவெளிய எம்பெருமான் **
பேரும் ஓர் ஆயிரம் * பிற பல உடைய எம்பெருமான் *
பேரும் ஓர் உருவமும் * உளதில்லை இலதில்லை பிணக்கே 4

2701 பிணக்கற அறுவகைச் சமயமும் * நெறியுள்ளி உரைத்த *
கணக்கறு நலத்தனன் * அந்தமில் ஆதியம் பகவன் **
வணக்குடைத் தவநெறி * வழி நின்று புறநெறி களைகட்டு *
உணக்குமின் பசையற * அவனுடை உணர்வு கொண்டு உணர்ந்தே 5

2702 உணர்ந்துணர்ந்து இழிந்தகன்று * உயர்ந்துருவியந்த இந்நிலைமை *
உணர்ந்துணர்ந்து உணரிலும் * இறைநிலை உணர்வரிது உயிர்காள்! **
உணர்ந்துணர்ந்து உரைத்துரைத்து * அரி அயன் அரன் என்னும் இவரை *
உணர்ந்துணர்ந்து உரைத்துரைத்து * இறைஞ்சுமின் மனப்பட்டதொன்றே 6

2703 ஒன்றெனப் பலவென * அறிவரும் வடிவினுள் நின்ற *
நன்றெழில் நாரணன் * நான்முகன் அரன் என்னும் இவரை **
ஒன்ற நும் மனத்து வைத்து * உள்ளி நும் இருபசை அறுத்து *
நன்றென நலம் செய்வது * அவனிடை நம்முடை நாளே 7

2704 நாளும் நின்றடு நம பழமை * அங்கொடு வினையுடனே
மாளும் * ஓர் குறைவில்லை * மனனக மலமறக் கழுவி **

[1] உயர்ந்த

நாளும் நம் திருவுடை அடிகள் தம் * நலங்கழல் வணங்கி[2] *
மாளும் ஓர் இடத்திலும் * வணக்கொடு மாள்வது வலமே 8

2705 வலத்தனன் திரிபுரம் எரித்தவன் * இடம் பெறத்துந்தித்
தலத்து * எழுதிசைமுகன் படைத்த * நல்லுலகமும் தானும்
புலப்பட ** பின்னும் தன் உலகத்தில் * அகத்தனன் தானே
சொலப்புகில் * இவை பின்னும் வயிற்றுள * இவை அவன் துயக்கே 9

2706 துயக்கறு மதியில் நல்ஞானத்துள் * அமரரைத் துயக்கும் *
மயக்குடை மாயைகள் * வானிலும் பெரியன வல்லன் **
புயற்கரு நிறத்தனன் * பெருநிலம் கடந்த நல்லடிப் போது *
அயர்ப்பிலன் அலற்றுவன் * தழுவுவன் வணங்குவன் அமர்ந்தே 10

2707 * அமரர்கள் தொழுதெழ * அலைகடல் கடைந்தவன் தன்னை *
அமர்பொழில் வளங்குருகூர்ச் * சடகோபன் குற்றேவல்கள்[3] **
அமர்சுவை ஆயிரத்து * அவற்றினுள் இவை பத்தும் வல்லார் *
அமரரோடு உயர்வில் சென்று * அறுவர் தம் பிறவி அஞ்சிறையே 11

**அடிவரவு:** பத்துடை எளிவரும் அமைவுடை யாரும் பிணக்கற உணர்ந்து
ஒன்று நாளும் வலத்தனன் துயக்கறு அமரர் அஞ்சிறை

[2] வணங்கின
[3] குற்றேவல்